RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s254

OPEN ACCESS

# தென்னிந்திய பழங்குடியினரின் சமூக வளர்ச்சி

ச. ஆனந்தகுமார் [அ, *], கோ. ராமகிருஷ்ணன் [ஆ]

[அ] மதுரை காமராஜர் பல்கலைகழகம், மதுரை - 21, தமிழ்நாடு, இந்தியா.

[ஆ] சரஸ்வதி நாராயணன் கல்லூரி, மதுரை - 22, தமிழ்நாடு, இந்தியா.

# Social Development of South Indian Tribes

**S. Anandakumar [a, *], G. Ramakrishnan [a, *]**

[a] School of Historical Studies, Madurai Kamaraj University, Madurai – 21, Tamilnadu, India

[b] Department of History, Saraswathi Narayanan College, Madurai – 22, Tamilnadu, India

* Corresponding Author: anandsaduragiri7@gmail.com

Received: 11-03-2021
Revised: 25-10-2021
Accepted: 06-11-2021
Published: 28-02-2022

Check for updates

## ABSTRACT

What tribes are they? Understanding the nature of man will help you find the solution to this query. Primitive man, a breed of creatures that grew and changed over thousands of years, was destined to kill or perish. His means of defence and sustenance became hunting. He hunted and preyed on other creatures naturally. When there was no hunting, those of us who had always considered ourselves to be strict vegetarians would only eat fruits and tubers from the forest to survive. It was feasible to catch animals alive and feed them when needed (as in the case of the Sami, rearing and butchering the kida) because to the expertise and training acquired through constant hunting. He is now a food producer, having risen from the state of gathering and consuming what is available to him from nature. He's now consuming dairy, cereals, and pulses in addition to meat. Initially viewed as livestock and food sources, he started to consider animals as tools for agriculture. Towns and cities were created when forests were cleared and agriculture was established in the riverbeds that were rich in water. There is no longer a need for the group power needed for hunting. Those who worked in groups broke up into families at this time, cattle and land became private property, and the first structures of a state that looked out for the community emerged. He is now a food producer, having risen from the state of gathering and consuming what is available to him from nature. He's now consuming dairy, cereals, and pulses in addition to meat. Initially viewed as livestock and food sources, he started to consider animals as tools for agriculture. Towns and cities were created when forests were cleared and agriculture was established in the riverbeds that were rich in water. There is no longer a need for the group power needed for hunting. Those who worked in groups broke up into families at this time, cattle and land became private property, and the first structures of a state that looked out for the community emerged. It is not required to believe that these developments occurred globally at the same time. It should be mentioned that commonalities may have led to a variety of specific and general disparities. Different segments of the population have fallen behind at different points over the lengthy transition from hunting to modern technologies. The ethnic groups left behind continue to practise what humans originally knew for food, clothing, shelter, worship, beliefs, and interpersonal relationships because they are unable to adapt to the inevitable, never-ending march of change. Tribes are ethnic communities who adhere to the lifestyle of prehistoric man, who lived in harmony with nature and did not significantly alter it. They do not associate with the bulk of humanity, who dominate or destroy nature in order to meet their demands.

**Keywords:** Tribes, Society, Culture, Hunting, Food Gathering, Tribal Law, Agriculture

## முன்னுரை

இந்தியாவைப் பொறுத்தவரை பழங்குடிகளின் வாழ்க்கை முறையை ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு பின்பு என இரு கூறாக பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பிருந்த இந்திய சமூக அமைப்பு வேட்டையாடுவது காட்டிலிருந்து உணவு சேகரிப்பது காடுகளை ஒட்டியே மேட்டுத்தரிசுகளில் சாமை, திணை, வரகு, கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகிய புஞ்சை தானியங்களை விளைவிப்பது என்னும் பழங்குடியின வாழ்க்கை முறைக்கு அடுத்தநிலையில் இருந்தது. அதாவது வேளாண்மை உழுபடைக் கருவி உற்பத்தி தொழில்கள், பண்டமாற்று முறையில் வாணிபம், நெசவு என கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகமாக அது மாறியிருந்தது. அங்கிருந்த அரசர்களும் பரிவாரங்களும் மக்களை வாட்டி வதைத்து கொல்வதில் சலிப்புத் தட்டும்போது காடுகளுக்கு வேட்டையாட வந்துபோனாலும் மலைகள், காடுகள் மீதான முழு உரிமையும் பழங்குடியினருக்கே இருந்தது (Sivasubramaniyan, 2016). ஆங்கிலேயர் ஆட்சி காடுகள், மலைகள் உள்ளிட்ட நாட்டின் நிலங்கள் மீதான தனியார் உரிமையை சட்டபூர்வமாக்கி வரிவிதித்ததோடு அந்தந்த பகுதிகளில் தமக்கு விசுவாசமாய் இருந்த பெரும் நிலவுடைமையாளர்களை வரி வசூலிப்பவர்களாக நியமித்தது. அதுவரை இருந்த பழங்குடி மக்களின் சமூக பண்பாடடு வாழ்வு முறையில் பேரளவிலான சிதைவுகளை உண்டாக்கியது. தங்களது இனக்குழு தலைவரின் கீழ் சமுதாய மூத்தோர்களைக் கொண்ட ஊர்சபைக்கு மட்டுமே கட்டுப்பட்டு வாழ்ந்து வந்த பழங்குடிகள் முதன்முறையாக வெளியாலான வசூலிப்பவரின் கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டியிருந்தது. நிலத்தை தனியுடைமையாகவோ விற்கத் தகுந்ததாகவோ பார்க்கும் வழக்கமற்றுயிருந்த பழங்குடி சமூகங்களின் நிலப்பகுதிகளை தனியார் ஆக்கிரமிக்கும் அபாயம் உருவானது. காட்டின்மீது தமக்கிருந்த பிறப்புரிமையை அங்கீகரிக்க மறுத்த ஆங்கிலேயரை எதிர்த்து பழங்குடியுங்கள் தொடர்ந்து போராடினர். இதன் விளைவாக பழங்குடிகள் அனுபோகத்தில் இருக்கும் நிலத்தை பிறர் வாங்குவதை தடுக்கும் வகையில் *1879ல் பம்பாய் மாகாண நில வருவாய் சட்டம், 1908ல் சோட்ட நாக்பூர் குத்தகை சட்டம்* இயற்றப்பட்டன.

ஆனாலும் தாக்குதல்கள் வேறுரூபத்தில் தொடர்ந்தன காப்பி, தேயிலை எஸ்டேட்டுகளுக்காகவும் மலைவாசஸ்தல மாளிகைகளுக்காகவும் பழங்குடிகளின் நிலங்கள் அரசால் பறிக்கப்பட்டன. தமது மூதாதையராலும் வனதேவதைகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டதென நம்பிய நிலங்களை இழந்த பழங்குடிகள் தோட்டத் தொழிலாளிகளாகவும், ஆங்கிலேயர்களின் அடிமைகளாகவும் நிலவுடைமையாளர்களின் பண்ணைக்கூலிகளாக மாறிய அவலம் நிகழ்ந்தேறியது. தலைமுறை தலைமுறையாய் காடுகளைப் பற்றி அவர்கள் பெற்றிருந்த பாரம்பரிய அறிவும் அனுபவமும் புறக்கணிக்கப்பட்டு கூலிக்கு மாரடிக்க வந்த வனத்துறை ஊழியர்களிடம் காடுகள் ஒப்படைக்கப்பட்டன. எஞ்சிய காடுகளையும் பணம் விளையும் பூமியாய் கருதிய அரசாங்கம் மரம் மூங்கில் வெட்டிக்கொள்ள தனியாருக்கு குத்தகைக்கு விட்டது. காட்டின் விளைபொருட்கள் மீது பழங்குடியினருக்கு இருந்த உரிமைகள் முற்றிலுமாக மறுக்கப்பட்டன. இன்னொரு பழங்குடியினத்தோடும் கூட மன உறவு கொள்ளாதபடி ஊர் கட்டுப்பாட்டுக்குள் வளர்ந்த பழங்குடியின பெண்கள் பண்ணையார்கள் வனகுத்தகைதாரர்கள் வனத்துறையினரின் பாலியல் வன்முறைக்கு ஆளாயினர் திருட்டை கடும் குற்றமாக கருதி மணல் முட்டையை சுமக்குமாறு தண்டனை வழங்கிய பழங்குடி சமூகத்தின் சிறு பிரிவினர் திருடி பிழைக்கும் அவலமும் நேர்ந்தது கண்ணியமான வாழ்விற்கு ஆதாரமான காட்டை இழந்த பிறகு பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபட்டவர்களை ஒடுக்க குற்ற பரம்பரை பழங்குடி சட்டம் 1871 இயற்றப்பட்டது பிழைப்பிற்கு வழி தேடி நாடோடிகளாக அலையத் தொடங்கிய கூட்டம் திருவிழாவில் தொலைந்த குழந்தையைப் போல நாடு முழுவதும் காணப்படுகிறார்கள் (Lajpat Rai, 2016). வளர்ச்சி பணிகள் என்ற பெயரில் நாட்டில் கட்டப்பட்டிருக்கும் 4,291 அணைக்கட்டுகளுக்கும் பல்வேறு கனிமங்களுக்காக தோண்டப்பட்டிருக்கும் 4,175 சுரங்கங்களுக்காகவும் தன் பிறந்த மண்ணை விட்டு விரட்டியடிக்கப்பட்டவர்களில் பெரும் பகுதியினர் பழங்குடியினரே போதிய மாற்று ஏற்பாடுகளும்

நிவாரணமும் இன்றி சொந்த நாட்டில் அகதிகளாக்கப்பட்டவர்கள் நாட்டின் பெருநகரங்களில் பிச்சைக்காரர்களாகவும், வீட்டு வேலைக்காரர்களாகவும் மாறியுள்ளனர். 1911ல் ஜார்கண்ட் பகுதியில் மொத்த மக்கள் தொகையில் 60 சதவீதமாக இருந்த பழங்குடியினர் எண்ணிக்கையை 2011 26.21 சதவீதமாக குறைந்துவிட்டது. அப்பகுதியில் அதிகமாக தோண்டப்பட்டுள்ள சுரங்கங்களால் பழங்குடியினர் வெளியேற்றப்பட்டது இதற்கு காரணம் என்கிறது ஒரு ஆய்வறிக்கை இத்தனை ஆக்கரமிப்புகளுக்கு பின்னும் உலகிலேயே மிக அதிக அளவிலான பழங்குடியினர் வாழும் நாடாக இந்தியா நீடிக்கிறது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மலைகளிலும் மலை சார்ந்த வனங்களிலும் சமவெளிகளிலும் தீவுகளிலும் 692 இனக்குழுக்களாக ஒதுங்கி வாழும் பழங்குடிகள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 8.6% இம்மக்கள் தொகையானது சீனம் தவிர்த்த கிழக்கு ஆசிய நாடுகளில் மொத்த மக்கள் தொகையை விட அதிகம் கனடா, ஆஸ்திரேலியா, ஸ்வீடன், பெல்ஜியம் போன்ற நான்கு நாடுகளின் கூட்டுத் தொகையை விட அதிகமாகும். பழங்குடிகள் பல்வேறு பிரிவினாய் இருந்தாலும் அவர்களின் பண்பாடானது வாழிடங்களை ஒட்டி சிற்சில மாறுபாடுகள் இருப்பின் ஏராளமான பொதுத்தன்மை கொண்டதாகவும் உள்ளது.

## பண்பாட்டுக் கூறுகள்

பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம் வழக்கம் முதலானவையும் மனித சமூகத்தின் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத்தொகுதிகளாகும் என்று தமது *தொன்மை பண்பாடு* என்கிற நூலில் வரையறுக்கிறார் மானிடவியல் அறிஞர் *எட்வர்ட் பண்ட் டைலர் 1877* இந்த வரையறையை ஒரு அடிப்படையாகக் கொண்டு இன்றைய இந்திய பழங்குடிகளின் வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு அவர்களது பண்பாடு, இயற்கை சார்ந்த ஆதிமனிதனின் பண்பாட்டுடன் வெகுவாக ஒத்துப் போகக் கூடியதாகவே உள்ளதை அறிய முடிகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை மந்திரங்களும், சடங்குகளும் இல்லாத எந்த ஒரு காரியத்தையும் அவர்களால் கற்பனை செய்யவும் முடியாது. இயற்கையயையும் நமது மூதாதையரின் ஆவிகளையும் திருப்தி செய்யும்விதமாக பொருட்டு நிகழ்த்த பெரும் இச்சடங்குகள் ஆதிமனிதனின் அச்சத்தில் இருந்து உதித்த வழிபாட்டு சடங்குகளின் தொடர்ச்சியாகும். காடுகளையே நமது வாழிடமாகவும், வாழ்வாதாரங்களை விளைவித்து தருகிற பூமியாகவும் போற்றுகின்ற இவர்களது வன தேவதை வழிபாடு இயல்பான ஒன்றாகும் (Rajendran, 2014). காடுகளிலும், மலைகளிலும் விளைந்து மணக்கும் மூலிகைகளின் மருத்துவ குணத்தை அறிந்தவர்களாகவும், அனுபவ வைத்தியத்தில் கைதேர்ந்தவர்களாகவும் காட்டுக் கொடிகள் மூங்கில் கொண்டு கலைநயமிக்க கைவினைப் பொருள்களை செய்பவர்களாகவும் காலடி தடங்களையும் வாசனையையும் வைத்து விலங்குகளின் மறைவிடங்களை கண்டறியும் நுட்பம் கூடியவர்களாகவும், உயர்ந்த பாறைகளிலும் மரங்களிலும் ஏறி தேன் எடுப்பதும் காட்டார்களிலும் கடலிலும் மீன் பிடிப்பதிலும் வல்லமை கொண்டவர்களாகவும் இன்றளவும் தமது சமூக பாரம்பரியத்தின் அறிவையும் திறமைகளையும் பெற்றுள்ளனர்.

பெரும்பாலான பழங்குடி பிரிவினர் இத்தகைய தமது நம்பிக்கைகளை உண்மையேன நம்பி அதற்கிசைவாக கதைகளையும், பாடல்களையும், சடங்குகளையும் தலைமுறை தலைமுறையாக காத்து வருகின்றனர். துளை, குழல், தோல், இசைக்கருவிகள் வழியே கானகமெங்கும் மிதந்து கொண்டிருக்கிறது. இவர்களின் இசை அந்தந்த பகுதியில் பெரும்பான்மை சமூகத்தில் புழங்கும் மொழியின் கொச்சை அல்லது ஆதிவடிவத்தை தனது மொழியாக கொண்டிருக்கும் பழங்குடிகள் உலகம் அதில் மனிதன் உள்ளிட்ட உயிர்களின் தோற்றம் பற்றி மேற்கொண்ட தத்துவ விசாரத்தில் உருவான அற்புதமான கதைகள் மேன்மையான இலக்கிய வகைகளுக்குள் அடங்கும் *வெரியர் எல்வின்* தொகுத்துள்ள இக்கதைகள் இந்திய இலக்கியத்திற்கு பழங்குடிகளின் கொடையாகும். உலகம் குழந்தையாக இருந்தபோது குழுவாக கூடி வாழும் பழங்குடிகள் தமது குழுவில் இருக்கும் அனைவரையும் சமமாகவே கருதுகின்றனர் பரம்பரை வழியாக தலைவரின் கீழ் சமுதாய

மூத்தோர்களை கொண்ட ஊர்ச்சபைக்கு மொத்தக்குழுவும் கட்டுப்பட்டு நடப்பது எழுதப்படாத விதியாக உள்ளது. திருவிழாக்களுக்கு திட்டமிடுவது, மணமுடிப்பு, மனவிளக்கு, சாவு சடங்குகளை முன்னின்று நடத்துவது, குழுவினருக்குள் ஏதேனும் சச்சரவு மூலுமானால் விசாரித்து தீர்ப்பது என குழுவின் முக்கியமான நிகழ்வுகள் அனைத்துமே ஊர்சபைகளின் கட்டுப்பாட்டில்தான் உள்ளன.

அவர்களின் பாரம்பரிய வழக்கங்களை மீறுவோரை தண்டிக்கவும் அதிகாரம் கொண்டது இச்சபை ஒவ்வொரு பழங்குடி பிரிவும் அதற்குள்ளேயே தான் மணஉறவு கொள்கிறது திருமண முறை மிகவும் எளிமையானது. திருமணத்திற்கு முன்பே மணமக்கள் கூடி வாழ அனுமதிக்கும் வழக்கம் சில பிரிவுகளில் உள்ளது மணமகனின் விருந்தோடு நிறைவுறுகிறது திருமணம். பெரும்பாலான பிரிவுகளில் தாலி கட்டும் வழக்கம் இல்லை. பூப்படைவதையும் மாதவிலக்கையும், பிரசவத்தையும், தீட்டாக கருதுவது அக்காலங்களில் பெண்களை மறைவாக ஒதுக்கி வைப்பதும் எல்லா பழங்குடி பிரிவினரின் பொது வழக்கமாக உள்ளது. உணவு சேகரிப்பிலும் தண்ணீர் தேடி அலைவதிலும் புஞ்சை விவசாயத்தை பராமரிப்பதிலும் ஆற்றலோடு இயங்கும் பெண்ணுக்கு ஊர்சபைகளில் இடமில்லை. அது ஆண்களின் சபையாகவே நீடிக்கிறது. அவர்களுக்கு சொத்துரிமையும் கிடையாது. வழிபாட்டு உரிமையும் கூட மறுக்கப்பட்டவளாகவே இருக்கிறாள். ஆனாலும் நாகரிகம் வளர்ச்சி அடைந்ததால் அலட்சியம் கொள்ளும் சமூக பிரிவுகளை விட பழங்குடி சமூகத்தில் பெண்களின் நிலை மதிக்கத்தக்கதாய் இருக்கிறது. ஒரு சில பிரிவுகளில் குழந்தை திருமணம் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் நடைமுறையில் பூப்படைந்த பின்பே திருமணம், தனது வாழ்க்கை துணையை தனது விருப்பப்படி தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் அவளுக்கு உண்டு. வரதட்சணை கொடுமை கிடையாது. மணமகன் தான் மணமகளுக்கு பரிசம் கட்ட வேண்டியுள்ளது. சில பிரிவுகளில் பால்கூலி என்ற பெயரில் மாமியாருக்கும் தரப்படுகிறது. கருத்து மாறுபாடு ஏற்படுகிறபோது மணவுறவை முறித்துக் கொள்ளவும், மறுமணம் செய்து கொள்ளவும் பெண்ணுக்கு உரிமை இருக்கிறது.

## தமிழகத்தில் பண்பாட்டுக் கூறுகள்

சற்றேறக்குறைய இத்தகைய பண்பாட்டுக் கூறுகளோடு தமிழகத்தில் அடியன், அரநாடன், இருளர், ஊராளி, கணியன், ஏரவள்ளன், கம்மாரா, காட்டுநாயக்கர், காணிக்காரர், காடர், குறும்பர், குடிமலைக்குடி, குறிச்சான், கொச்சுவேலன், கோத்தர், கொண்டாரெட்டி, கொரகர், தொதவர், பளியர், பணியர், பளியன், சோளகர், கொண்டகாபு, மகாமலசர், மலை அரையன், மலைக்குறவர், மலசர், மலைபண்டாரம், மலையாளி, மலைவேடன், மன்னான், முதுவர், தோடர், மலைக்கண்டி, முடுகர் போன்ற 36 வகையான பழங்குடிகள் வாழ்கின்றனர் இவர்களில் பெரும்பாலானோர் நீலகிரி ஆனைமலை கொல்லிமலை சேர்வராயன் மலை கல்வராயன் மலை 6 மலை பச்சைமலை ஜவ்வாது மலை சித்தேரி மலைகளிலும் அவற்றை ஒட்டி வனப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். பாம்பு பிடிப்பது முதல் பயிர் தொழில் வரை பல்வேறு தொழில் முனைகளில் பிரிந்து இயங்கும் தமிழகத்தில் மொத்த பழங்குடி மக்கள் தொகையில் 54.14 சதவீதம் மலையாளிகள் உள்ளன (Ayyapan, 2014). தாங்கள் பழங்குடிகள் அல்லவென்று கீழ் நாட்டில் இருந்து வந்து மலையில் வாழும் வேளாள கவுண்டர்களின் வம்சாவளி என்றும் மலையாளிகள் சொல்லிக் கொண்டாலும் அவர்களின் பெரும் பெரும்பாலானவரின் பொருளாதார சமூக வளர்ச்சி பிற பழங்குடிகளுடன் சேர்ந்ததாகவே இருக்கிறது. வளர்ச்சி திட்டங்களின் பெயரால் தங்கள் சொந்த மண்ணுக்கு அந்நியமாகி போகும் ஒரு இனம் நம் மண்ணோடு சேர்ந்து உருவான பண்பாட்டை பெயர்ந்து போகும் இடங்களிலும் காப்பாற்றுவது சாத்தியமில்லை. அதேநேரத்தில் இடப்பெயர்ச்சி குடியமரும் வாழ்விடத்தில் நிலவும் பண்பாட்டுக்கு தன்னை முழுமையான ஒப்புக்கொடுத்தும் விடாது இரண்டுக்கும் இடையில் அல்லாடி மாட்டிக்கொண்டு சொந்தபூமியையும் பண்பாட்டையும் தக்கவைத்துக்கொள்ள முடியாத தனது இயலாமை குறித்த வேதனையும் அவமானமும் தாங்கமுடியாத மனஅழுத்தத்தை கொடுக்கும் என்று உளவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே இடப்பெயர்ச்சி என்கிற தொடர் தாக்குதலில் இருந்தும் தற்காத்துக் கொள்ள பழங்குடி

மக்கள் போராடுவதும், அப்போராட்டத்தில் நியாயத்தை உணர்ந்து பிறர் பங்கேற்பதும் இன்றைய தேவையாயிருக்கிறது. பாதுகாப்பு உணர்வு கருதி இறுகிய குழு வாழ்க்கையை மேற்கொண்டு இருக்கும் பழங்குடிகளிடம் புறக்கருத்துக்கள் ஊடுருவிச் சென்று செல்வாக்கு செலுத்துவது சாத்தியமற்ற ஒன்றாகவே நீடித்த நிலை பிரிடிசாரின் தலையிட்டுக்குப் பிறகு சிதையதொடங்கியது. தோட்டத்தொழில்களுக்கும் சமவெளிக்கும் விரட்டப்பட்டவர்கள் பிறரோடு கலக்க நேர்ந்ததில் அவர்களின் மொழி பழக்க வழக்கங்களில் சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன தலித்களை தீண்டதகாதவர்களாக கருதும் சமவெளிபகுதியின் சாதியபிடிமானம் தங்களுக்குள் சமத்துவத்தை பேணுகின்ற பழங்குடிகளிடமும் வலுவாக வேறுன்றியுள்ளது. பழங்குடியினரின் வாழ்முறையில் இருந்திடாத வரதட்சனை கேட்கும் போக்கு ஆங்காங்கே தென்பட தொடங்கியுள்ளது.

நிச்சயமற்றதாய் வாழ்க்கை மாறிவரும் நிலையில் பில்லி சூனியம் மூலம் தங்களை தற்காத்துக் கொள்ள முடியும் என்று அவர்கள் இன்னும் நம்பிக்கொண்டிருப்பதை வெறுமனே மூடநம்பிக்கை என்று ஏளனமாய் சொல்லி நாம் நகர்ந்து விட முடியாது சமவெளி அல்லது நகர நாகரீகமே உயர்ந்தது என்கிற போலி பெருமிதத்தை கைவிட்டு பழங்குடிகளின் பண்பாட்டு தனித்துவத்தை புரிந்துகொள்வதும் இயற்கையை ஒட்டிய அவர்களது பண்பாட்டு மரபில் நீடிக்கும் அறிவியல் பூர்வமான நல்ல அம்சங்களை பாதுகாப்பது அதற்கு எதிரான பிற போக்குகளை கைவிடுமாறு பரிவோடு அணுகவும் நமக்கு பயிற்சி தேவையாகிறது தனித்தன்மை கொண்ட பழங்குடிகளை பாதுகாக்க மேற்குவங்கம், திரிபுரா போன்ற சுயாட்சி கவுன்சில்கள் அமைத்து முன்னுரிமை திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டிய ஆட்சியாளர்கள், சமூக நலத்திட்டங்களை முற்றாக கைவிட தூண்டும் உலக மையத்தின் அடி வருடிகளாக மாறியுள்ளன. கல்வி, மருத்துவம், சாலை, என சகலத்தையும் தனியார்மையம்மாக்குவதால் படித்து வெளியே வரும் சொற்ப அளவினரான பழங்குடியினரும் வேலைவாய்ப்பின்றி முடங்கிப் போக நேரிடும் முதல் தலைமுறை படிப்பாளிகளும் கூட உருவாகாத பெரும்பான்மையான பழங்குடிக் குடும்பங்கள் அதே நிலையைத் தொடரவேண்டியிருக்கும். மானியத்தில் இயங்கும் பொதுவிநியோகத் திட்டத்தை கைவிடுவதன் மூலம் ஏற்கனவே நிரந்தர வருமானமின்றி தவித்திருக்கும் பழங்குடிகள் பெருந்துயரத்திற்கு ஆளாவர். பெரும்பான்மை சமூகத்திற்கும் பழங்குடியினங்களுக்குமான இடைவெளி அதிகரிக்கும் போது உருவாகும் அவநம்பிக்கை பிரிவினை எண்ணத்தையே தூண்டும் என்பதற்கு நம்மிடம் போதுமான ஆதாரங்கள் உண்டு. எத்தன்மையான மக்களாயினும் அவர்களை வெறுமனவே நுகர்வோராக சுருக்கி சுரண்டத்துடிக்கும் உலகமையத்தை இதைப்போலவே பழங்குடிகளின் பண்பாட்டுத் தனித்தன்மையை அங்கீகரிக்க மறுக்கிறது இந்துத்துவமும் ஒரே பண்பாடு என்கிற கோஷத்தின் பின்னே மறைந்திருக்கும் அதன் அதிகாரத்திற்கு பழங்குடியினரின் பண்பாட்டையும் காவு கேட்கிறது. ரிஷிகளாலும், ராஜகுமாரர்களால் சாபங்களுக்கும், தண்டனைகளுக்கும் ஆளாக்கப்பட்ட பழங்குடியினர் என்று இழிவுபேசிய அதன் புராணிய வரலாற்றை மறைத்து இன்று இந்து என்கிற வலைக்குள் வீழ்த்தபார்க்கிறது. இந்துமதக்கடவுள் அவதாரங்களின் உடனிருந்து உதவியவர்கள் என்றெல்லாம் கதைத்து இந்துத்துவம் பழங்குடியினரை அனிதிரட்ட முயல்கிறது. குஜராத் கலவரத்தில் பழங்குடியினர் இந்துத்துவத்தின் கையாயுதமாய் பயன்படுத்தப்பட்டதையும் பழங்குடியினர் நிறைந்த நீலகிரி போன்ற மலை பகுதிகளின் இந்துத்துவ அமைப்புகளின் அரசியல் வளர்ச்சியை கவனித்தோமானால் அது தன் சீரழிவு பாதையில் முன்னேறி வருவதை உணரமுடிகிறது.

## முடிவுரை

நகரவாசியாய் வாழ பிடிக்காமல் வனத்திற்கு ஓடிப்போனவர்களை விளிப்பதைப்போல "*வனவாசி*" என்று அழைப்பதன் மூலம் காட்டின் மீது பழங்குடியினருக்கு உள்ள முதன்மையான உரிமையை மறுப்பதற்குத்துணிகிறது. இந்துத்துவம் தவிரவும் சமவெளிகளிலும் தீவுகளிலும் வாழும் பழங்குடியினரையும் அது ஒப்புக்கொள்வதில்லை. பழங்குடிகளை "வனவாசி" என்றழைப்பதன் பின் பதுங்கியுள்ள இத்தகைய நுண்னரசியலை நாம் புரிநதுகொள்ள வேண்டும். எவ்வித மத அனுஷ்டானங்களையும் கைக்கொள்ளாத தனித்துவமான பழங்குடியினரை

**இந்துமதத்திற்குள் கரைத்தமிக்கும் இந்துத்துவாவிற்கு சற்றும் குறைந்ததல்ல கிருத்துவ மிஷனரிகளின் செயல்பாடு கல்வி சுகாதாரம் பொருளாதார உதவிகள் என பாராட்ட தகுந்த பணிகளை செய்த இம்மிஷனரிகள் பழங்குடியினரை கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்வதன் மூலம் நாட்டின் பன்முகப்பட்ட பண்பாட்டின் மிகச்சிறந்த கூறுகளைக் கொண்ட பழங்குடிப் பண்பாட்டை சிதைக்கின்றன. மிஷனரிகளை காரணம் காட்டி இந்துத்துவதிற்கும், கிறிஸ்துவத்திற்கும் எதிரான தனது விரோதங்களுக்கு கணக்கு தீர்க்கும் களமாக பழங்குடிகளை முன்னிறுத்துகிறது. காடுகள் அழிப்பு காட்டின் மீதான உரிமை மறுப்பு, இடப்பெயர்ச்சி, வனத்துறை காவல்துறையின் அத்துமிடல்கள், மதமாற்றம் அரசாங்கங்களால் புறக்கணிப்பு என அடுக்கடுக்கான தாக்குதல்களால் தங்களது சுயத்திலிருந்து வெகுவாக அன்னியப்பட்டு வரும் பழங்குடியரை பாதுகாப்பதும் நாட்டின் பன்முகப்பட்ட பண்பாட்டுத்தன்மையை பாதுகாப்பதும் வெவ்வேறானதல்ல யாந்திரகமான செயல்பாட்டு வடிவங்களுக்குள் சிக்கிக்சூழலும் அமைப்புகளைப்போல் அல்லாது பழங்குடிகளின் தினப்படியான வாழ்வியல் எல்லா மட்டங்களிலும் கலந்து செயலாற்றும் திறன்கொண்ட உயிரோட்டமான ஒரு அமைப்பின் இடையறாத செயல்பாட்டின் மூலம் இவ்விலக்கை எட்ட முடியும்.**

## References


Ayyapan, K. (2014) Kalvarayan Malaiyalikal, Andrum Indrum, Visalaktchi Pathippagam, Chennai, India

Lajpat Rai, T. (2016) Tamizhagatthil Tholkudigalum Kaadugalum, Keelaikatru, Chennai, India

Rajendran, S. (2014) Mackenzie Suvadikalil Tamilaga Palankudi Makkal, Adayalam Pathippagam, Chennai, India

Sivasubramaniyan, (2016) Adithala Makkal Varalaru, New Century Book House, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


### About the License:


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author's 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License